# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 240/மா/2017**
**ஆணை நாள்: 03–12–2018**

திருமதி. M. அம்சா,
சென்னை – 600 014. --- முறையீட்டு மனுதாரர்

நிர்வாக அதிகாரி,
மற்றும் இணை ஆணையாளர்,
இந்துசமய அறநிலையத்துறை,
சென்னை – 600 034. --- எதிர் மனுதாரர்கள்

சென்னை மாநகராட்சி, இராயப்பேட்டை, எண்.26, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி. ம. அம்சா அவர்களின் 10.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 240/17 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் சென்னை மாநகராட்சி, 5வது மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியனவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாநகராட்சி, இராயப்பேட்டை, எண். 26, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி. ம. அம்சா என்பவர் இந்து அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட கோரிக்கையுடன், இராயப்பேட்டை அருள்மிகு செல்வ விநாயகர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 471/11 நில அளவை எண்ணுள்ள 747 சதுர அடி நிலத்தில் தரைதளம் மட்டும் கட்டிக் கொள்ள அனுமதி பெற்று முதல்தளமும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரிடம் 27.2.2018 மற்றும் 28.11.2018 ஆகிய இரு நாட்களிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின் போது முறையீட்டு மனுதாரரின் மகன் திரு. ம. சுரேஷ் அவர்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்டு எழுதிய கடிதத்தின் நகலினையும் சமர்பித்தார். திருக்கோயிலுக்கு சொந்தமான 471/11 நில அளவை எண்ணுள்ள 747 சதுர அடி நிலத்தில் தரைதளம் மற்றும் மேல்தளம் கட்டப்பட்டுள்ளதென்றும், குத்தகைதாரரிடம் 600 சதுர அடிக்கு மட்டுமே சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் தளத்திற்கு 15 ஆண்டு காலமாக சொத்துவரி வசூலிக்கப்படாததால் மாநகராட்சிக்கு வருமான வரி இழப்பு ஏற்பட்டுள்ளதென்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிலத்தினை குத்தகை பெற்ற நபர் கடை கட்டி வாடகைக்கு விட்டுள்ளார் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி, 5வது மண்டல அலுவலர் தனது 28.9.2018 மற்றும் 31.10.2018 நாளிட்ட கடிதங்களில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். இராயப்பேட்டை, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, புல எண். 471/11 இல் கட்டடம் கட்டுவதற்கு 2.12.2002 நாளிட்ட திட்ட அனுமதி எண். டி6/6541/2002 இல் திட்ட அனுமதியும் 9.01.2003 நாளிட்ட கட்டட அனுமதி எண். டி6/120/2003 இல் கட்டட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்று மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். திரு.ஜி.பிரபு என்பவர் பெயரில் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்றும் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டட அனுமதி என்றும் தெரிவித்துள்ளார். 660 சதுரடி பரப்பளவில் தரைதளம் மட்டும் கட்ட கட்டட அனுமதி பெற்று, அனுமதிக்கு மாறாக 600 சதுரடி பரப்பளவில் முதல் தளமும் கட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடம் கட்ட 2003 ஆம் ஆண்டில் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தரைதளத்திற்கு மட்டும் கட்டட அனுமதி பெற்று முதல் தளத்தையும் குத்தகைதாரர் கட்டியுள்ளார். எனவே, அனுமதியின்றி கட்டப்பட்ட முதல் தளத்தை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் அல்லது முதல்தளக் கட்டடப்பகுதி மூடி முத்திரையிடப்படவேண்டும். முதல் தளக் கட்டடப்பகுதிக்கு சொத்துவரி செலுத்தப்படவில்லை என்று முறையீட்டு மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நிலுவையில் உள்ள சொத்து

வரியினை வசூலிக்கவும், மாநகராட்சி சட்டவிதிகளின் கீழ் அனுமதியற்ற கட்டடப் பகுதியினை குறித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி, 5வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

18/12/18

பெறுநர்

1. திருமதி. ம. அம்சா,
எண்.26, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை – 600 014.

2. மண்டல அலுவலர்,
மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 61, பேசின்பாலம் சாலை,
சென்னை – 600 021.